Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 240 | உள்ளூர் - 28.08.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 240 | வெளியூர் - 29.08.2026 | சனிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் பெயர்ச்சி மாளவ்ய ராஜயோகம்! | அஞ்சல் துறையில் 2,095 காலியிடங்கள்! | இபிஎஸ் –உதயநிதி தரப்பில் பரபரப்பு! | தமிழகத்தில் புதிய கட்சி உதயம்! |

## இந்தியா-கனடா வர்த்தக பேச்சுவார்த்தைகளை இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்ய திட்டம்!



டொரோண்டோ, ஆக. 28–

மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், 8 நாட்கள் அரசுமுறை சுற்றுப்பயணமாக அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு சென்றுள்ளார். தனது பயணத்தின் முதற்கட்டமாக கனடா சென்றுள்ள நிர்மலா சீதாராமன், அந்நாட்டின் தலைநகர் டொராண்டோவில் நடைபெற்ற உயர்மட்ட வர்த்தக வட்டமேசை மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினார்.

தொடர்ந்து கனடாவின் நிதி மற்றும் தேசிய வருவாய் மந்திரி பிரான்கோயிஸ்–பிலிப் ஷாம்பெய்னுடன், தொடக்கப் பொருளாதார மற்றும் நிதிசார் கலந்துரையாடலில் நிர்மலா சீதாராமன் பங்கேற்றார். இந்த கலந்துரையாடலின்போது எல்லை தாண்டிய பணப் பரிமாற்றங்கள் மற்றும் வணிக கட்டணங்கள் தொடர்பான நிலவரங்களை ஆராய்வதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்கள் இடையிலான ஒத்துழைப்பை ஆதரிப்பதற்கு இருநாட்டு மந்திரிகளும் ஒப்புக்கொண்டனர்.

அதோடு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம், சுற்றுலா, கல்வி மற்றும் சிறு–நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்காக கனடாவில் யு.பி.ஐ. சேவையின் பயன்பாட்டை அதிகரிக்க அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும், இருதரப்புப் பொருளாதார மற்றும் நிதிசார் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் முயற்சியாக, 2026–ஆம் ஆண்டின் இறுதிக்குள் ‘விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தம்’ (CEPA) தொடர்பான பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்யவும், ‘இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம்’ குறித்த பேச்சுவார்த்தைகளை விரைவில் தொடங்க இந்தியாவும் கனடாவும் விரும்புவதாக இருநாட்டு மந்திரிகள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மே.வங்க அரசின் 100 நாள் ஆட்சி!




மேற்குவங்கம், ஆக. 28–

மேற்கு வங்கத்தில் பாஜக தலைமையிலான அரசு 100 நாட்களை நிறைவு செய்ததை முன்னிட்டு, ‘Sark–arer 100 Din’ மாநாடு நடைபெற்றது. இதில் முதல்வர் சுவேந்து அதிகாரி, மாநில வளர்ச்சிக்கான 6 அம்ச திட்டங்களையும், 3 சிறப்புக் குழுக்களையும் அறிவித்தார். மாநிலத்தை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு சென்று தற்சார்பு மாநிலமாக மாற்றுவதே நோக்கம் என அவர் தெரிவித்தார்.

முந்தைய ஆட்சி விட்டுச்சென்றதாக கூறப்படும் நிதி நெருக்கடியை சமாளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

3 குழுக்களில், தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் தபஸ் ராய் தலைமையிலான குழு மூடப்பட்ட தொழிற்சாலைகளுக்கான காரணங்களை ஆய்வு செய்து புதிய தொழில் கொள்கையை உருவாக்கும். நிதியமைச்சர் ஸ்வபன் தாஸ்குப்தா தலைமையிலான குழு முந்தைய ஆட்சியின் ஊழல் நடவடிக்கைகளையும், தலைமைச் செயலாளர் மனோஜ் அகர்வால் தலைமையிலான குழு முக்கிய நிர்வாக முடிவுகளையும் ஆய்வு செய்யும். மேலும், தொழில் நிறுவனங்களுக்கு தடையற்ற சூழல், எல்லைப் பாதுகாப்பில் BSF பங்கு அதிகரிப்பு ஆகியவற்றுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. சுற்றுலா, நகர்ப்புற உள்கட்டமைப்பு, மத்திய நலத்திட்டங்கள் உள்ளிட்ட எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர்கள் அறிவிப்புகளை வெளியிட்டனர்.

## நேபாள பேரிடரில் சிக்கிய தமிழர்கள்: தில்லியில் மீட்புப் பணிகளை ஒருங்கிணைக்கும் தமிழக அமைச்சர்கள்!



சென்னை, ஆக. 28–

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கைகளுக்காக, தில்லி சென்றுள்ள தமிழக அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, ராஜ்மோகன், வினோத் மற்றும் தென்னரசு அமைச்சர்கள் தமிழ்நாடு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள உதவி மையக் கட்டுப்பாட்டு அறையை ஆய்வு செய்தும், தூதரக அதிகாரிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டு தமிழர்களை மீட்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கால் பல குடியிருப்புகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இந்த காட்டாற்று வெள்ளத்தில் சிக்கி 495–க்கும் மேற்பட்டோர் பலியானதாகவும், 1000–க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் என கூறப்படுகிறது. மாயமானவர்களை தேடும் பணியில் அந்நாட்டு ராணுவம் ஈடுபட்டுள்ளது. மோப்ப நாய்கள் உதவியுடன் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த பேரிடரில் இந்தியாவைச் சேர்ந்த 300–க்கும் மேற்பட்டோர் மாயமாகி உள்ளனர் என நேபாள அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், சென்னை குரோம்பேட்டை ராதா நகர், ரங்கநாதன் தெருவில் உள்ள மகாதேவ் கைலாஷ் யாத்ரா என்ற டிராவல்ஸ் நிறுவனம், 49 பேர் யாத்திரை சென்றனர். அவர்கள் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கி மாயமான நிலையில், அவர்களது குடும்பத்தினர் அச்சத்திலுள்ளனர்.

இதேபோன்று கோவை ஈஷா யோகா மைய குழுவைச் சேர்ந்த 80 பேரும் நேபாளம் சென்றுள்ளனர். அவர்களது நிலை குறித்தும் தெரியவில்லை.

ஆன்மிக பேச்சாளர் தேச. மங்கையர்க்கரசி தலைமையில் கைலாஷ் யாத்திரைக்கு சென்ற 150 பேர் பாதுகாப்பாக திபெத்தில் உள்ளனர். இது தொடர்பாக தேச.மங்கையர்க்கரசி, தாங்கள் 150 பேரும் பாதுகாப்பாக இருப்பதாக ஒரு விடியோவை வியாழக்கிழமை வெளியிட்டார். இவர்கள் கைலாஷ் யாத்திரைக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது, நேபாளத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் 150 பேரும் திபெத்திலேயே தங்கியுள்ளனர் என்று தகவல் வந்துள்ளது.

இதையடுத்து நேபாளத்தில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்கும் நடவடிக்கைகளில் மத்திய, மாநில அரசுகள் முயற்சி செய்து வருகின்றன.

நேபாள பெருவெள்ள பகுதிகளில் சிக்கியதாக கருதப்பட்டு, தொடர்பற்றுப் போயுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் நிலை குறித்து அறிவதற்காக அவர்களின் உறவினர்கள் தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தை வியாழக்கிழமை இடைவிடாது தொடர்பு கொண்டு விசாரித்தனர். தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஐஏஎஸ் அதிகாரிகள் குழு நேபாளம் சென்றுள்ளது.

இதனிடையே, மீட்புப்பணிகளை ஒருங்கிணைப்பதற்கான தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன், வேளாண்மைத் துறை அமைச்சர் வினோத் மற்றும் அயலகத் தமிழர் நலத்துறை அமைச்சர் தென்னரசு ஆகியோர் தில்லி சென்றனர்.

இந்த நிலையில், தில்லி தமிழ்நாடு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள உதவி மையக் கட்டுப்பாட்டு அறையை அமைச்சர்கள் குழு வெள்ளிக்கிழமை காலை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்பதற்கான உதவி மையத்தின் செயல்பாடுகள், பெறப்படும் அழைப்புகள், தகவல் சேகரிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைப்பு குறித்து அதிகாரிகளுடன் கேட்டறிந்தனர். தூதரக அதிகாரிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

இதனிடையே, தமிழகத்தில் இருந்து 50–க்கும் மேற்பட்டோர் தான் நேபாளம் சென்றிருப்பார்கள் என்று நினைத்தோம். தற்போது ஒன்றுக்கும் மேற்பட்ட குழுவைச் சேர்ந்த 100–க்கும் மேற்பட்டோர் சென்றிருப்பது தெரியவந்துள்ளது. 26 பேர் பாதுகாப்பாக இருப்பதாகவும், அவர்களை தொடர்பு கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சிலரை கண்டறிய முடியவில்லை. மத்திய அரசு, நேபாள அரசுடன் பேசி அவர்களுக்கான உதவிகளை செய்வோம். விரைவில் அவர்களை மீட்டு வருவோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு துணை நிற்போம் என்று அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

## E20–க்கு செக்!

# E10 வருது புதுசா! மத்திய அரசு அதிரடி!

## வாகன ஓட்டிகளுக்கு ஷாக்!!




புதுடெல்லி, ஆக. 28–

இந்தியா முழுவதும் E20 பெட்ரோல் குறித்து மக்கள் மற்றும் ஆட்டோமொபைல் நிறுவனங்கள் விமர்சனம் செய்து வரும் நிலையில், E10 பெட்ரோலை அறிமுகப்படுத்துவது குறித்து மத்திய அரசு முக்கிய ஆலோசனை நடத்தி வருகிறது.எத்தனால் கலப்பதால் அரசுக்கு செலவினம் குறையும் என கூறப்பட்டாலும், E20 பெட்ரோலால் வாகனங்களின் மைலேஜ் குறைவதுடன், இன்ஜின் பழுதடையும் பிரச்சினையும் ஏற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால், தற்போது விற்பனையாகும் XP95, Speed, Power95 ஆகிய உயர்ஆக்டேன் பெட்ரோல்களை E10 பெட்ரோலாக விற்பனை செய்வது குறித்து ஆலோசிக்கப்படுகிறது. தற்போது இவை எத்தனால் கலக்காத தூய பெட்ரோலாக விற்பனை செய்யப்படுகின்றன. E10–க்கு தனி பிராண்ட், விநியோகச் சங்கிலி, சேமிப்பு வசதிகளை உருவாக்கினால் கூடுதல் செலவு ஏற்படும் என்பதால், ஏற்கனவே உள்ள பெட்ரோலை E10 ஆக மாற்றும் திட்டம் பரிசீலிக்கப்படுகிறது. இதுதொடர்பாக இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனங்களுடன் பெட்ரோலிய அமைச்சகம் ஆலோசித்து வருகிறது. E10 பெட்ரோல், தற்போதைய தூய பெட்ரோலின் விலைக்கு இணையாக அல்லது சற்று குறைவாக விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், E20 பெட்ரோலில் குளோரைடு அளவை 3 ppm–க்கு கீழ் கட்டுப்படுத்தும் விதிமுறையையும் மத்திய அரசு பரிசீலிக்கிறது. இதற்கான தர நிர்ணயப் பணிகளில் BIS ஈடுபட்டுள்ளது. விதிமுறை அமலானால் சுத்திகரிப்பு நிறுவனங்களின் செலவு அதிகரித்து, பெட்ரோல் விலையும் உயர வாய்ப்புள்ளது. இதனால் எதிர்காலத்தில் E10, E20 மட்டுமே சந்தையில் முக்கிய பெட்ரோல் வகைகளாக மாறும் சூழல் உருவாகலாம்.


## “பிரதமர் ரேஸில் விஜய்!




சென்னை, ஆக. 28–

2029 மக்களவைத் தேர்தலில் பிரதமராக முதல்வர் விஜய் வருவதற்கு 9.2% பேர் ஆதரவு தெரிவித்துள்ளதாக இந்தியா டுடேசி ஓட்டர் ‘மூட் ஆஃப் தி நேஷன்’ கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் நரேந்திர மோடிக்கு 48.7%, ராகுல் காந்திக்கு 27.1% ஆதரவு கிடைத்துள்ளது. மேலும், இந்தியா கூட்டணி தலைவராக விஜய்க்கு 12.2% பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். ராகுல் காந்திக்கு 29%, மம்தா பானர்ஜிக்கு 8.5%, அகிலேஷ் யாதவுக்கு 6.9% ஆதரவு கிடைத்துள்ளது. இதற்கிடையே, விஜய்யை பிரதமர் வேட்பாளராக தவெக நிர்வாகிகள் தொடர்ந்து முன்னிறுத்தி வருவது, கூட்டணியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

## நேபாள வெள்ளம்: சடலங்களில் நகை திருடிய கும்பல் !



ரசுவா, ஆக. 28–

திபெத்தை ஒட்டிய ரசுவா மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம், திரிசூலி, நாராயணி உள்ளிட்ட நதிகளில் பெருக்கெடுத்து ரசுவா, நுவாகோட், தாடிங், சிட்வான் மாவட்டங்களை கடுமையாக பாதித்தது.

நேபாள ராணுவம் உள்ளிட்ட மீட்புக் குழுவினர் மூன்றாவது நாளாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 500–க்கும் மேற்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.

இதற்கிடையே, சகதியில் புதைந்த சடலங்களைத் தேடி, அவற்றில் இருந்த கம்மல் உள்ளிட்ட நகைகளை திருடிய காட்சிகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தின. இதுதொடர்பாக உமேஷ், மதன் ஆகிய இருவர் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

## நேபாள வெள்ளம்: பலி 500!



நேபாளம், ஆக. 28–

நேபாளத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த மேலும் பலரின் உடல்கள் வெள்ளிக்கிழமை காலை மீட்கப்பட்டன. இதையடுத்து, உயிரிழந்தோர் எண்ணிக்கை 500–ஐ கடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

திபெத்தின் லெண்டே நதியில் உருவான பெருவெள்ளம், போடே கோஷி நதி வழியாக நேபாளத்தின் மத்திய மாவட்டங்களுக்குள் புதன்கிழமை புகுந்து பேரழிவை விளைவித்தது.

திபெத்தையொட்டிய ரசுவா மாவட்டத்தில் போடே கோஷி நதியில் முதலில் பெருக்கெடுத்த வெள்ளம், பின்னர் திரிசூலி, நாராயணி நதிகளிலும் பாய்ந்ததால், நுவாகோட், தாடிங் உள்பட பல்வேறு மாவட்டங்கள் கடும் பாதிப்பைச் சந்தித்தன. பலத்த உயிர்ச் சேதம் மற்றும் பொருட்சேதத்துடன், நேபாளம் கடந்த பல்லாண்டுகளில் காணாத மிக மோசமான இயற்கைப் பேரிடராக இது மாறியுள்ளது. வெள்ளத்தால் புரட்டிபோடப்பட்ட ரசுவா, நுவாகோட், தாடிங், சிட்வான் உள்ளிட்ட மாவட்டங்களில் நேபாள ராணுவம் மற்றும் பிற முகமையினர் மூன்றாவது நாளாக வெள்ளிக்கிழமையும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சகதி குவியலிலிருந்து தோண்டத் தோண்ட உடல்கள் கண்டெடுக்கப்பட்டு வரும் நிலையில், உயிரிழந்தோர் எண்ணிக்கை வெள்ளிக்கிழமை காலை 500–ஐ கடந்தது.

திபெத்தில் உள்ள கைலாஷ் மானசரோவருக்கு ஆன்மிக யாத்திரை சென்ற 288 இந்தியர்கள் உள்பட 1000–க்கும் அதிகமானோர் மாயமாகியுள்ளனர். வெள்ளத்தில் தகவல் தொடர்பு கட்டமைப்பு முற்றிலும் சிதைந்திருக்கும் நிலையில், யாரையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் காணாமல் போனவர்களின் நிலையை அறிய முடியவில்லை.

மேலும், இந்தியர்கள் உள்பட காணாமல் போனவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக நேபாள தேசிய பேரிடர் குறைப்பு மற்றும் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 28.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 11-ம் தேதி

# LGP சிலிண்டர் தேடி அலையும் மக்கள்!!



ஈரான் போர் காரணமாக ஏற்பட்ட LPG தட்டுப்பாட்டைத் தொடர்ந்து, இந்தியாவில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் இன்னும் முழுமையாக நீக்கப்படவில்லை. குறிப்பாக புதிய வீட்டு உபயோக 14.2 கிலோ LPG சிலிண்டர் இணைப்புகள் வழங்குவது தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சென்னை, டெல்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு உள்ளிட்ட பெருநகரங்களில் கடந்த மார்ச் மாதம் முதல் புதிய இணைப்புகள் வழங்கப்படவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே விண்ணப்பித்த பலரும் பல மாதங்களாக காத்திருப்பதாக புகார் தெரிவித்துள்ளனர்.

மத்திய பெட்ரோலிய அமைச்சகத்தின் விளக்கப்படி, தற்போதைய புவிசார் அரசியல் சூழ்நிலை காரணமாக புதிய இணைப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள நுகர்வோருக்கு தடையின்றி சிலிண்டர் வழங்குவதற்கே விநியோகஸ்தர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

புதிய இணைப்பு கிடைக்காதவர்கள் தற்காலிகமாக 5 கிலோ மற்றும் 10 கிலோ மினி சிலிண்டர்களை பயன்படுத்தலாம். இவற்றை உடனடியாக வாங்கி, காலியானதும் மீண்டும் ரீஃபில் செய்யலாம். வழக்கமான சிலிண்டரைப் போல நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை. 5/10 கிலோ மினி சிலிண்டர் பற்றி உடனே விசாரிக்கலாம்; ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்கள் முன்கூட்டியே புக்கிங் செய்து விநியோக நிலையை உறுதி செய்து கொள்ளலாம். புக்கிங் செய்தும் சிலிண்டர் கிடைக்கவில்லை என்றால் வாடிக்கையாளர் சேவை / விநியோகஸ்தரிடம் புகார் பதிவு செய்து புகார் எண்ணை பாதுகாத்துக் கொள்ளலாம். சிலிண்டர் தட்டுப்பாடு அல்லது அதிக விலை குறித்து அதிகாரப்பூர்வ புகார் வழிமுறைகளில் தெரிவிக்கலாம்.அங்கீகரிக்கப்படாத நபர்களிடம் அதிக பணம் கொடுத்து சிலிண்டர் வாங்க வேண்டாம்.

இந்தியா தனது LPG தேவையில் பெரும் பகுதியை வளைகுடா நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது. போரால் ஹார்முஸ் ஜலசந்தி வழியான கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் LPG வரத்து குறைந்தது. போருக்கு முன்பு இந்தியாவின் LPG தேவையில் சுமார் 60% இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், அதில் சுமார் 90% ஹார்முஸ் ஜலசந்தி வழியாக வந்தது.

இதையடுத்து உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்ததுடன், அமெரிக்காவில் இருந்தும் LPG இறக்குமதி அதிகரிக்கப்பட்டுள்ளது. மேற்காசிய நிலைமை இயல்பு நிலைக்கு திரும்பியதும் புதிய கேஸ் இணைப்புகள் மீண்டும் வழங்கப்படும் என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# நேபாளத்துக்கு மீண்டும் வெள்ளப்பெருக்கு அபாயம்: சீனா எச்சரிக்கை!



காத்மாண்டு, ஆக. 28–

நேபாளத்தின் போடேகோஷி நதியின் கிளை நதியில் பனிச்சரிவு ஏற்பட்டு ஏரி உருவாகி அந்த பெருவெள்ளம் பெருக்கெடுத்ததால் மிகப்பெரும் சேதம் விளைந்துள்ளது. இந்த பேரிடரில் இருந்து நாடு இன்னும் மீள்வதற்குள் மற்றொரு வெள்ளப்பெருக்கு எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. அதாவது சோச்சென் கோலா மற்றும் புரேபு சாங்போ ஆறுகள் சங்கமிக்கும் இடத்திற்கு அருகில் புதிய ஏரி உருவாகியுள்ளது. இவ்விரு ஆறுகளும் திபெத்தில் உருவாகி நேபாளத்தில் பாய்ந்து, போடே கோஷி நதியின் ஒரு பகுதியாக மாறி வருகின்றன. இந்த ஏரியில் நேற்று காலை வரை 20 லட்சம் கன மீட்டர் நீர் இருப்பதாகவும் இது அடுத்த 3 நாட்களில் 50 லட்சம் கன மீட்டராக உயரக்கூடும் எனவும் சீன அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இந்த வெள்ளம் பெருக்கெடுத்தால் மற்றுமொரு பேரிடர் நிகழும் வாய்ப்பு இருப்பதாக நேபாள அரசுக்கு சீனா தெரிவித்து உள்ளது.

இதை அந்த நாட்டு நீரியல் மற்றும் வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது. இந்த புதிய எச்சரிக்கை கரையோர மக்களுக்கு மீண்டும் பீதியை ஏற்படுத்தி உள்ளது.

# சீனாவில் அஜித் தோவல்.. இந்தியா - சீனா எல்லை நிர்ணயத்தில் உடன்பாடு!



புதுடெல்லி, ஆக. 28–

இந்தியா – சீனாவுக்கு இடையே எல்லை மோதல் நீண்ட காலமாக நீடித்து வருகிறது. கடந்த 2019 இல் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டை தாண்டி சீன வீரர்கள் கல்வான் பள்ளத்தாக்கில் புகுந்து நடத்திய தாக்குதலில் 20 இந்திய ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து சீனாவுடனான இந்தியாவின் உறவு பின்னடைவை சந்தித்த நிலையில் அந்த கசப்புகளை மறந்து பிரதமர் மோடி, சீன அதிபர் ஜி ஜின் பிங் சந்திப்பு 2025 ஷாங்காய் உச்சிமாநாட்டில் நடைபெற்றது.

முன்னதாக எல்லைக் கோட்டில் இரு நாட்டு வீரர்களும் இதன்முன் தாங்கள் இருந்த நிலைகளுக்கு திரும்புவதாக 2024 இல் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இருந்தபோதும் லடாக் உள்ளிட்ட எல்லைகளில் சீனா, தனது ராணுவ இருப்பை தொடர்ந்து அதிகப்படுத்தியும், ராணுவ கட்டமைப்புகளை மேற்கொண்டும், இமாச்சல பிரதேசத்தின் பகுதிகளை தங்களின் நாட்டு பகுதிகளாக வரைபடம் வெளியிட்டும் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

இந்த சூழலில் அடுத்த ஆண்டு இந்தியாவில் நடக்கும் பிரிக்ஸ் மாநாட்டில் சீன அதிபர் பங்கேற்பார் என கூறப்படுகிறது.

இதனிடையே இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் எல்லை பிரச்சனை மற்றும் இரு நாட்டு உறவுகள் குறித்து பேச சீனாவுக்கு பயணம் மேற்கொண்டார்.

**அஜித் தோவல்**

சீன வெளியுறவு அமைச்சகத்தின் தகவலின்படி, ஆகஸ்ட் 25 அன்று பெய்ஜிங்கில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி ஆகியோருக்கு இடையே நடைபெற்ற 25வது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது சில உடன்பாடுகள் எப்பட்டுள்ளன.

எல்லைப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க இரு தரப்பும் ஒப்புக்கொண்டன.

**எல்லை நிர்ணயம்**

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே 3,488 கி.மீ நீளத்திற்கு 'எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு' மட்டுமே உள்ளதே தவிர, இரு நாடுகளும் கூட்டாக ஏற்றுக்கொண்ட நிலையான எல்லைக்கோடு இல்லை.

எல்லையை துல்லியமாக நிர்ணயிப்பதுகுறித்து அஜித் தோவல் மற்றும் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி ஆகியோர் ஆலோசித்துள்ளனர்.

வரைபடத்தில் எந்தெந்த நிலப்பரப்பு யாருக்குச் சொந்தம், எல்லைக்கோடு எங்கு அமையும் என்பதைப் பேச்சுவார்த்தை மூலம் முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**பேச்சுவார்த்தை**

எல்லைப் பிரச்சனை தொடர்பாக சிறப்புப் பிரதிநிதிகள் மட்டத்திலான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையை 2027இல் இந்தியாவில் நடத்துவதற்கும் இரு தரப்பும் ஒப்புக்கொண்டுள்ளன.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் எழும் சிக்கல்களுக்கு ராணுவ தளபதிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும்.

எல்லையின் கிழக்கு மற்றும் மத்தியப் பகுதிகளில் இரு நாடுகளுக்கும் இடையே மேலும் இரண்டு புதிய ராணுவ ஹாட்லைன் தொடர்பு வழிகள் நிறுவப்படும். குறிப்பிட்ட 3 எல்லை வர்த்தக மையங்களை மீண்டும் திறப்பதை இரு தரப்பும் வரவேற்றதோடு, எல்லை வர்த்தகம் மற்றும் புனிதப் பயணங்களை வலுப்படுத்தவும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.

2024 இல் இரு நாட்டு படைகளையும் அதன் முந்தைய நிலைகளுக்கு திரும்பச் செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அஜித் தோவல் மற்றும் வாங் யி சந்திப்பது இது மூன்றாவது முறையாகும்.

# காமன்வெல்த் ஆயத்தப் பணிகள், ஒலிம்பிக் போட்டிக்கான விண்ணப்பம் குறித்து அமித்ஷா தலைமையில் ஆய்வுக்கூட்டம்!



காந்திநகர், ஆக. 28–

2030–ம் ஆண்டுக்கான காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா இன்று ஆய்வு செய்தார். அத்துடன் 2036–ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான இந்தியாவின் விருப்பம் (bid) குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இன்று மத்திய மந்திரி அமித்ஷா தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மத்திய விளையாட்டுத் துறை மந்திரி மன்சுக் மாண்டவியா, குஜராத் துணை முதல்–மந்திரி ஹர்ஷ் சங்கவி ஆகியோரும் பங்கேற்றனர். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் மத்திய மந்திரி அமித்ஷா பதிவிட்டுள்ளதாவது;–

"சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதன் மூலம் இந்தியாவை உலகளாவிய விளையாட்டு மையமாக மாற்றுவதில் மோடி அரசு உறுதியாக உள்ளது. அகமதாபாத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 2036 ஒலிம்பிக் போட்டிகளுக்கான இந்தியாவின் விண்ணப்பம், 2029–ம் ஆண்டுக்கான காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறை விளையாட்டுப் போட்டிகள் (Police and Fire Games) மற்றும் 2030 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். விளையாட்டுப் போட்டிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பிற செயல்பாட்டு நடைமுறைகளை கண்காணிப்பதில் உள்துறை அமைச்சகம் முக்கியப் பங்காற்றும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் மீண்டும் இந்தியாவுக்கு வர உள்ளன. இந்த முறை அகமதாபாத்தில் போட்டிகள் நடைபெறவுள்ளன. முன்னதாக 2010–ம் ஆண்டு டெல்லியில் காமன்வெல்த் போட்டி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் புதிய கட்சி உதயம்!




சென்னை, ஆக. 28–

தமிழக அரசியல் களத்தில் 'மக்கள் ஒற்றுமை கழகம்' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி தொடங்கப்பட்டுள்ளது. சென்னையில் நடைபெற்ற நிகழ்வில், அக்கட்சியின் மாநிலத் தலைவர் கமால் பாஷா புதிய கட்சியின் பெயர் மற்றும் அதிகாரப்பூர்வ கொடியை முறைப்படி அறிமுகம் செய்து வைத்தார்.

நிகழ்வில் பேசிய கட்சியின் தலைவர் கமால் பாஷா, "த.மு.மு.க. மற்றும் மனிதநேய ஜனநாயக கட்சி ஆகியவற்றில் பல்வேறு முக்கிய பொறுப்புகளில் பணியாற்றிய அனுபவத்துடன், பல கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகளையும் ஒன்றிணைத்து தற்போது 'மக்கள் ஒற்றுமை கழகம்' எனும் புதிய இயக்கத்தைத் தொடங்கியுள்ளோம். கட்சியை வலுப்படுத்தும் வகையில் மொத்தம் 22 சார்பு அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன" என குறிப்பிட்டார்.

# ரன்வேயில் திடீரென வெடித்த விமான டயர்கள்: அதிர்ஷ்டவசமாக 172 பயணிகள் உயிர் தப்பினர்!




அமெரிக்கா, ஆக. 28–

அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணம் சிகாகோவில் ஓஹேர் சர்வதேச விமான நிலையம் உள்ளது. இந்த விமான நிலையத்தில் இருந்து வடக்கு கரோலினாவின் சார்லோட் நகருக்கு அமெரிக்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத் துக்கு சொந்தமான போயிங் 737 ரக ஜம்போ விமானம் இயக்கப்பட்டது. விமானத்தில் 172 பயணிகள், 20–க்கும் மேற்பட்ட சிப்பந்திகள் இடம் பெற்றனர். மதியம் 2 மணியளவில் விமானம் புறப்படுவதற்கு கட்டுப்பாட்டு அறையில் இருந்து சிக்னல் கிடைத்தது. இதனை தொடர்ந்து ஓடுபாதை யில் அந்த விமானம் நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

அப்போது விமானத்தின் வலதுபுறம் இருந்த 2 டயர்களும் திடீரென வெடித்து சிதறின. இதனால் விமானத்தில் இருந்து திடீரென தீப்பிடித்து புகையும் கிளம்பியது. மேலும் விமானம் குலுங்கியதால் பயணிகள் பதற்றம் அடைந்தனர். இருப்பினும் இது எப்போதும் போல் புறப்படும் முன்னர் ஏற்படும் நிகழ்வு என கருதி விமானிகள் உள்பட பயணிகள் அஜாக்கிரதையாக விட்டனர். இதனை பின்னால் இருந்த மற்றொரு விமானத்தின் விமானி கவனித்து, உடனடியாக கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார். இதனால் விமானம் ஓடுபாதையில் இருந்து புறப்பட்டு வானில் பறப்பதற்கு முன்பே தடுத்து நிறுத்தப்பட்டது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீயணைப்பு வீரர்கள் வர வழைக்கப்பட்டு விமானத்தில் பற்றி எரிந்த தீயை அணைத்தனர். பயணிகள் அனைவரும் விமானத்தில் இருந்து பத்திரமாக இறக்கப்பட்டு, பஸ்கள்மூலம்முனையத்திற்கு அவசரமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. பின்னர் பயணிகள் மாற்று விமானம் மூலம் சார்லோட் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதனால் 8 மணி நேரம் தாமதம் ஏற்பட்டது. கடந்த இரண்டு வாரங்களில் சிகாகோ விமான நிலையங்களில் நடக்கும் 5–வது டயர் வெடிப்பு சம்பவம் இதுவாகும். இது குறித்து மத்திய விமான போக்குவரத்து நிர்வாகம் விசாரணை நடத்தி வருகிறது. இருப்பினும், இந்த சம்பவங்களுக்கு இடையே எந்த தொடர்பும் இல்லை என்றும், வெவ்வேறு ஓடுபாதைகள் மற்றும் விமான மாடல்களில் இவை நிகழ்ந்துள்ளதாகவும் சிகாகோ விமான போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.



# சுக்கிரன் பெயர்ச்சி மாளவ்ய ராஜயோகம்!




செப்டம்பர் 2, 2026 மதியம் 1.44 மணிக்கு சுக்கிர பகவான் தனது சொந்த ராசியான துலாமில் நுழைகிறார். இங்கு நவம்பர் 6 வரை சஞ்சரிக்கிறார். சுக்கிரன் ஆட்சி பெறுவதால் மாளவ்ய ராஜயோகம் உருவாகிறது. செல்வம், அதிர்ஷ்டம், காதல், கலை, செழிப்பு ஆகியவற்றை குறிக்கும் சுக்கிரனின் இந்தப் பெயர்ச்சி, குறிப்பிட்ட ராசிகளுக்கு பல்வேறு சாதகமான மாற்றங்களை தரலாம்.

**மேஷம்**

தொழில், வணிக முயற்சிகளில் முன்னேற்றம்
கூட்டுத் தொழிலில் வளர்ச்சி
புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகலாம்
காதல், திருமண உறவில் மகிழ்ச்சி அதிகரிக்கும்
திருமணமாகாதவர்களுக்கு நல்ல வரன் அமையும் வாய்ப்பு
திடீர் பணவரவு அல்லது பெரிய லாபம் கிடைக்கலாம்
முக்கிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்

**கடகம்**

நிதிநிலையில் நல்ல முன்னேற்றம்
பழைய முதலீடுகள் மூலம் லாபம் கிடைக்கலாம்
பணியிடத்தில் புதிய பொறுப்புகள், வாய்ப்புகள்
தொழில் செய்பவர்களுக்கு அதிக லாபம்
செல்வம், சொத்து சேர்க்கும் வாய்ப்பு
பொருளாதார ரீதியாக நிலையான முன்னேற்றம்
அறிவுப்பூர்வமான சிந்தனையால் முக்கிய முடிவுகளில் வெற்றி

**சிம்மம்**

வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பு
பதவி உயர்வு கிடைக்கலாம்
புதிய திட்டங்கள் மூலம் லாபம்
புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்கும்
தொழில் விரிவாக்கத்திற்கு வாய்ப்பு
இழந்த பணம் திரும்பக் கிடைக்கலாம்
சமூகத்தில் புகழ், கௌரவம் அதிகரிக்கும்
தன்னம்பிக்கை மற்றும் மகிழ்ச்சிக்காக செலவிடும் வாய்ப்பு

**கன்னி**

பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்
தடைப்பட்ட முக்கிய பணிகள் நிறைவு பெறும்
பணவரவில் புதிய வாய்ப்புகள் உருவாகும்
பதவி உயர்வு அல்லது உயர்ந்த நிலையை அடையலாம்
பணியிடத்தில் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்
புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்பு
நிதி சார்ந்த முடிவுகளில் சாதகமான மாற்றம்

**துலாம்**

ராசியிலேயே சுக்கிரன் சஞ்சரிப்பதால் சிறப்பான பலன்கள்
முன்னேற்றம், கௌரவம் அதிகரிக்கும்
முதலீடுகள் மூலம் ஆதாயம் கிடைக்கலாம்
கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும்
தொழிலில் புதிய நபர்களின் தொடர்பு கிடைக்கும்
புதிய வாய்ப்புகள் தேடி வரலாம்
செல்வம் தொடர்பான முயற்சிகளில் வெற்றி
பணியிடத்தில் பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு

**மகரம்**

கர்ம ஸ்தானத்தில் சுக்கிரன் ஆட்சி பெறுகிறார்
பணியிடத்தில் புதிய பொறுப்புகள் கிடைக்கலாம்
செயல்பாடுகளால் மதிப்பு, மரியாதை உயரும்
தொழிலில் புதிய வாய்ப்புகள் உருவாகும்
மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்
புதிய வாடிக்கையாளர்கள் சேரலாம்
புதிய பங்குதாரர்கள் மூலம் வளர்ச்சி ஏற்படலாம்
தொழில் முன்னேற்றத்திற்கு சாதகமான காலம்

**கும்பம்**

பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சாரம்
வருமானம் கணிசமாக அதிகரிக்கலாம்
தந்தை அல்லது பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும்
அவர்களின் ஆலோசனை முன்னேற்றத்திற்கு உதவும்
தொழில், வணிகத்தில் புதிய வாய்ப்புகள்
கூட்டுத் தொழில் மூலம் நன்மை
பழைய முதலீடுகளில் லாபம் கிடைக்கலாம்
புதிய முதலீடுகளில் ஆலோசனையுடன் செயல்பட்டால் நல்ல பலன்

**முக்கிய குறிப்பு**

இந்தப் பெயர்ச்சி காலத்தில் பணம், தொழில், வேலை, முதலீடு, சொத்து, காதல், திருமணம், புகழ், புதிய வாய்ப்புகள்போன்ற பல்வேறு அம்சங்களில் சாதகமான மாற்றங்கள் ஏற்படலாம் என ஜோதிடப் பார்வையில் கூறப்படுகிறது.

# தொடர் சரிவில் தங்கம் விலை!



சென்னை, ஆக. 28–

தங்கம் விலை குறைந்துள்ளது. கிராமுக்கு 75 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.14 ஆயிரத்து 650–க்கும் சவரனுக்கு 600 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 200 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலையும் குறைந்துள்ளது. கிராமுக்கு 5 ரூபாய் குறைந்து ஒரு கிராம் வெள்ளி 260 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# டீயை மீண்டும் மீண்டும் கொதிக்க வைக்கிறீங்களா?



காலையில் தயாரித்த டீயை பல மணி நேரம் வைத்திருந்து மீண்டும் மீண்டும் கொதிக்க வைத்து குடிப்பது சுவை மற்றும் தரத்தை பாதிக்கலாம். குறிப்பாக பால், சர்க்கரை சேர்த்த டீயை அறை வெப்பநிலையில் நீண்ட நேரம் வைப்பதுஉணவுப் பாதுகாப்பு பிரச்சினைகளை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

**என்ன பாதிப்பு?**

டீயின் சுவை, நறுமணம் மாறி கசப்பு அதிகரிக்கலாம்.

அதிக நேரம் வைக்கப்பட்ட டீயில் நுண்ணுயிர்கள் வளர வாய்ப்பு உள்ளது.

இதனால் சிலருக்கு வயிற்று வலி, குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.

டீயில் உள்ள சில தாவரச் சேர்மங்கள் வெப்பம் மற்றும் ஆக்சிஜனேற்றத்தால் மாற்றமடையலாம்.

வெறும் வயிற்றில் அதிக டீ குடிப்பது சிலருக்கு அமிலத்தன்மை, நெஞ்செரிச்சலை ஏற்படுத்தலாம்.

**முக்கிய எச்சரிக்கை**

"மீண்டும் கொதிக்க வைத்தால் டானின் ஆபத்தான அளவுக்கு அதிகரிக்கும்" என்ற கூற்றுக்கு வலுவான அறிவியல் ஆதாரம் இல்லை. உண்மையான கவலை, டீ எவ்வளவு நேரம் அறை வெப்பநிலையில் இருந்தது என்பதுதான்.

**என்ன செய்யலாம்?**

தேவையான அளவு மட்டும் புதிதாக டீ தயாரித்து குடிப்பது சிறந்தது. மீதமிருந்தால் விரைவாக குளிர்வித்து மூடிய பாத்திரத்தில் ஃப்ரிட்ஜில் வைக்கலாம். நீண்ட நேரம் வெளியே இருந்த டீயை மீண்டும் கொதிக்க வைத்து குடிப்பதைத் தவிர்ப்பது நல்லது.

# டாலர்களை ரூபாயாக மாற்ற வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி சலுகை!

மும்பை, ஆக. 28–

வெளிநாட்டுவாழ் இந்தியர்களிடம் திரட்டப்பட்ட டாலர்களை ரூபாயாக பரிமாற்றம் செய்ய வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி சலுகை அளித்துள்ளது.




வெளிநாடுகளில் இருந்து டாலர் வரத்தை அதிகரிப்பதன் மூலம் அன்னிய செலாவணி கையிருப்பை வலுப்படுத்தவும், ரூபாய் மீதான நம்பிக்கையை அதிகரிக்கவும் ரிசர்வ் வங்கி, மானியத்துடன் கூடிய சிறப்பு வைப்புத் திட்டத்தை அறிவித்தது. இதன் காலக்கெடு 31–ந் தேதியுடன் முடிவடைகிறது.

இத்திட்டத்தின்கீழ், வெளிநாட்டுவாழ் இந்தியர்களிடம் திரட்டிய டாலர்களை வங்கிகள் ரிசர்வ் வங்கியிடம் கொடுத்து ரூபாயாக 'ஸ்வாப்' முறையில் பரிமாற்றம் செய்து கொள்ளலாம். இதற்காக வங்கிகளுக்கு வாரத்தில் ஒருநாள் ஒதுக்கப்பட்டு இருந்தது.

இந்த திட்டத்தின் மூலம் இதுவரை 6 ஆயிரத்து 500 கோடி டாலர் கிடைத்துள்ளது. டாலர்கள் குவியும்போது, அவற்றை மாற்றுவதற்கான நாள்வரை வங்கிகள் காத்திருக்க வேண்டி உள்ளது. இதனால், விலை ஏற்ற இறக்க அபாய தடுப்பு செலவுகளையும் வங்கிகள் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது.

இந்நிலையில், வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி புதிய சலுகையை அறிவித்துள்ளது. 10 கோடி டாலர்களுக்கு மேற்பட்ட பரிமாற்றத்துக்கு வாரத்துக்கு ஒருதடவைக்கு மேல் பரிமாற்ற வசதியை வங்கிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ரிசர்வ் வங்கி தனது சுற்றறிக்கையில் கூறியுள்ளது.

ஆனால், 10 கோடி டாலருக்கு குறைவான பரிமாற்றத்துக்கு ஏற்கனவே இருப்பதுபோல் வாரத்துக்கு ஒருதடவை மட்டுமே பரிமாற்ற வசதியை பயன்படுத்த முடியும் என்று தெளிவு படுத்தி உள்ளது. சிறப்பு வைப்புத் திட்ட காலக்கெடு முடிவடைய இருக்கும் போது, உபரி டாலர்களை கையாள வங்கிகளுக்கு இச்சலுகை நெகிழ்வுத்தன்மையை அளிக்கும் என்று கருதப்படுகிறது.

# வேலை வாய்ப்பு

## அஞ்சல் துறையில் 2,095 காலியிடங்கள்!





விவரம் தகவல்
நிறுவனம் தமிழ்நாடு அஞ்சல் துறை
அறிவிப்பு எண் 17–12/2026–GDS 20.08.2026
பணி வகை மத்திய அரசு வேலை
காலியிடங்கள் 2,095 Gramin Dak Sevak (GDS), Branch Postmaster (BPM), Assistant Branch Postmaster (ABPM), Dak Sevak
பணியிடம் தமிழ்நாடு
OTR தொடக்கம் 31.08.2026
OTR கடைசி நாள் 19.09.2026 மாலை 5.00 மணி
விண்ணப்பம் தொடக்கம் 02.09.2026
விண்ணப்பிக்க கடைசி நாள் 21.09.2026 மாலை 5.00 மணி
விண்ணப்பிக்கும் முறை ஆன்லைன் –ttps://indiapost.gov.in/gdsonlineengagement
அதிகாரப்பூர்வ இணையதளம் indiapost.gov.in GDS Online Engagement
முக்கியம்: முதலில் OTR பதிவு செய்து, பின்னர் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

# இபிஎஸ் -உதயநிதி தரப்பில் பரபரப்பு!

சென்னை, ஆக. 28–

தமிழ்நாட்டில் விலைவாசி உயர்வுக்கு எதிராக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினும் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் ஈடுபட்டனர்.





விலைவாசி உயர்வுக்கு எதிராக இன்றைய சட்டப்பேரவையில் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது, "அத்தியாவசிய பொருள்களின் விலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டே இருக்கிறது. அரிசி, பருப்பு, சர்க்கரை என எந்தப் பொருளை எடுத்தாலும் பல மடங்கு உயர்ந்திருக்கிறது. ஏழை, எளிய மக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகி இருக்கின்றனர்.

தவெக அரசில் அத்தியாவசிய பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த விலையேற்றத்தால் மக்கள் பாதிப்படைந்திருப்பதாகவும், மளிகைக் கடைகளுக்கே மக்கள் செல்வது குறைந்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இந்த விலை வாசி உயர்வைக் கட்டுப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரேஷன் கடைகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் அரிசி, பருப்பு, சர்க்கரையின் அளவை இன்னும் கூடுதலாக வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும். மேலும், முதல்வரின் தலைமையில் நிதி, உணவு, கூட்டுறவு ஆகிய துறைகளின் அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்கும் ஒரு சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு, விலைவாசி உயர்வுக்கு இந்த அரசு தீர்வுகாண வேண்டும்" என்று தெரிவித்தார். தொடர்ந்து, எடப்பாடி பழனிசாமி பேசியதாவது, "அரிசி விலை கிலோ வுக்கு ரூ. 20, சர்க்கரை விலை கிலோவுக்கு ரூ. 24 உயர்ந்துள்ளது. இதுதவிர பல்வேறு பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால், ஏழை எளிய மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். மாநிலத்தில் வறட்சி நிலவி வருகிறது. ஆந்திரத்திலும் வறட்சி நிலவுவதால், அங்கிருந்து கிடைக்கும் அரிசியின் வரவும் குறைந்துள்ளது. அதிமுக ஆட்சியில் விலைவாசி உயர்வைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததைப்போல, இந்த தவெக அரசும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதேனும் முயற்சி செய்கிறதா என அறிய விரும்புகிறோம்" என்று தெரிவித்தார்.



பழனி அடிவாரம் 29 வது வார்டில் கோவில் திருவிழாவை முன்னிட்டு அன்னதானத்தை சரவணப் பொய்கை கந்த விலாஸ் அதிபர் என் பாஸ்கரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி எழுச்சி பாசறை மாநில செயலாளர் ஜே பி சரவணன் வழங்கினார்கள்.

# மதுரையில் ஹெலிகாப்டர் சேவை: 30 நிமிடத்தில் திருச்செந்தூர் செல்லலாம்!

மதுரை, ஆக. 28–

மதுரை வளர்ந்து வரும் சுற்றுலா நகரமாக உள்ளது. இந்த நிலையில் மதுரையை மையமாக கொண்டு ராமேசுவரம், கொடைக்கானல், திருச்செந்தூர், பழனி உள்ளிட்ட பகுதிகளுக்கு சுற்றுலா செல்வதற்கான தனியார் ஹெலிகாப்டர் சேவை தொடங்கப்பட்டது. இதற்கான ஹெலிகாப்டர் இறங்கு தளம் மதுரை விமான நிலையம் அருகில் உள்ள ஒரு கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் மதுரையில் இருந்து சுமார் 30 நிமிடங்களில் திருச்செந்தூர் செல்ல முடியும். இதே போல் ராமேசுவரம் மற்றும் கொடைக்கானலுக்கு சுமார் ½ மணி நேரத்தில் செல்லலாம்.



சென்னைக்கு ஒரு மணி நேரம் 10 நிமிடங்களிலும், பெங்களூருவுக்கு 1½ மணி நேரத்திலும் செல்லலாம். அதிகாலை 4 மணி முதல் மாலை 5 மணி வரை அனுமதி உண்டு. ஒரு மணி நேரம் ஹெலிகாப்டரில் பயணம் செய்ய சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படும் என்றும், இதில் 5 பேர் வரை பயணம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# உயரும் விலை; ஆன்லைன் செயலிகளில் சர்க்கரை வாங்க வரம்பு நிர்ணயம்!

புதுடெல்லி, ஆக. 28–




விநாயகர் சதுர்த்தி பண்டிகை வரும் செப்டம்பர் 14–ந்தேதி கொண்டாடப்பட உள்ளது. தொடர்ந்து அக்டோபர் 11–ந்தேதியில் இருந்து நவராத்திரி பண்டிகை ஆரம்பமாக உள்ளது. பண்டிகை காலம் நெருங்கும் வேலையில், சர்க்கரை விலை தற்போது கணிசமாக உயர்ந்துள்ளதால் 'ஆன்லைன்' செயலிகளில் சர்க்கரை வாங்க வரம்பு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

ஒரு வாடிக்கையாளர், ஆன்லைன் மூலம் அதிகபட்சமாக இரண்டு கிலோ சர்க்கரை மட்டுமே வாங்க முடியும். ஆன்லைன் விற்பனைக்கு மட்டுமின்றி, நேரடி சில்லரை விற்பனையிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. டி மார்ட், ரிலையன்ஸ் உள்ளிட்ட பெரிய சில்லரை விற்பனை நிறுவனங்களில், ஒரு வாடிக்கையாளர் 2 முதல் 3 கிலோ சர்க்கரை மட்டுமே வாங்க வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் விநியோகத்தை அதிகரிக்கவும், பதுக்கலைத் தடுக்கவும், 10 லட்சம் டன் சுத்திகரிக்கப்படாத சர்க்கரையை சுங்க வரியின்றி இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இவற்றை இறக்குமதி செய்த காலத்தில் இருந்து இரண்டு மாதத்திற்குள் சுத்திகரித்து விற்பனை செய்ய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சினிமா துளிகள்..!



### 'தர்மன்' முடிந்ததும் சிலம்பரசனுடன் 'எஸ்டிஆர் 51' தான்... அஸ்வத் மாரிமுத்து உறுதி!



சமீபத்திய நிகழ்ச்சி ஒன்றில் 'எஸ்டிஆர் 51' குறித்து பேசிய அஸ்வத் மாரிமுத்து, 'அரசன்' மற்றும் 'தர்மன்' ஆகிய இரு படங்களின் படப்பிடிப்பும் ஒரே காலகட்டத்தில் நிறைவடையும் என்றும், 'தர்மன்' படத்திற்குப் பிறகு தனது அடுத்த படம் சிலம்பரசனுடன்தான் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

நடிகர் சிலம்பரசன் மற்றும் இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து கூட்டணியில் உருவாகும் திரைப்படம் "எஸ்டிஆர் 51". 'ஓ மை கடவுளே', 'டிராகன்' உள்ளிட்ட படங்களை இயக்கிய அஸ்வத் மாரிமுத்து இப்படத்தை இயக்குகிறார். இப்படத்திற்கு 'காட் ஆப் லவ்' என பெயரிடப்பட்டுள்ளது. ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் அறிவிப்பு வெளியானது முதலே ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

'அரசன்' படத்தில் பிஸியான சிலம்பரசன்

இயக்குநர் வெற்றிமாறன் இயக்கத்தில் சிலம்பரசன் நடித்து வரும் 'அரசன்' திரைப்படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இப்படம் வரும் தீபாவளியை முன்னிட்டு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 'எஸ்டிஆர் 51' படத்தின் பணிகள் தாமதமாகியுள்ளன. இருப்பினும், படம் கைவிடப்படவில்லை என்றும், திட்டமிட்டபடி உருவாகும் என்றும் தயாரிப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஜினியுடன் 'தர்மன்' படத்தை இயக்கும் அஸ்வத்

இதற்கிடையே, இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து நடிகர் ரஜினிகாந்தை வைத்து 'தர்மன்' திரைப்படத்தை இயக்கி வருகிறார். கமல்ஹாசன் தயாரிக்கும் இப்படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு தற்போது நடைபெற்று வருகிறது.

'தர்மன்' முடிந்ததும் 'எஸ்டிஆர் 51'

இந்நிலையில் சமீபத்திய நிகழ்ச்சி ஒன்றில் 'எஸ்டிஆர் 51' குறித்து பேசிய அஸ்வத் மாரிமுத்து, 'அரசன்' மற்றும் 'தர்மன்' ஆகிய இரு படங்களின் படப்பிடிப்பும் ஒரே காலகட்டத்தில் நிறைவடையும் என்றும், 'தர்மன்' படத்திற்குப் பிறகு தனது அடுத்த படம் சிலம்பரசனுடன்தான் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

"கதை தயாராகிவிட்டது... பேண்டஸி படம்"

மேலும், 'எஸ்டிஆர் 51' படத்திற்கான கதைப் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துவிட்டதாகவும், பாடல் பணிகளும் முடிந்துவிட்டதாகவும் அஸ்வத் மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

இந்தப் படம் 'மன்மதன்' வெளியான காலகட்டத்தில் வந்த படங்களின் பாணியில், பேண்டஸி அம்சங்களுடன் உருவாகும் என்றும் அவர் கூறியுள்ளார். இதனால் சிலம்பரசன் ரசிகர்கள் மத்தியில் 'எஸ்டிஆர் 51' படத்தின் மீதான எதிர்பார்ப்பு மீண்டும் அதிகரித்துள்ளது.

# செந்தில் பாலாஜிக்கு எதிரான வழக்குகளுக்கு தடை நீட்டிப்பு!

சென்னை, ஆக. 28–

ஊத்தங்கரை த.வெ.க. எம்.எல்.ஏ. என்.இளையராஜாவிடம், குதிரை பேரம் பேசியதாக செந்தில் பாலாஜி உள்படபலர்மீது தொடரப்பட்ட வழக்கை சிபிஐ. விசாரணைக்கு மாற்ற கோரி சென்னை ஐகோர்ட்டில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுக்களை விசாரித்த ஐகோர்ட்டு குதிரை பேர வழக்கை விசாரணைக்கு ஒட்டுமொத்தமாக தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

அதேபோல செந்தில்பாலாஜி உள்பட பலர் மீது டாஸ்மாக் ஊழல் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ரமேஷ், சென்னை ஐகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து, அவருக்கு எதிரான விசாரணைக்கு மட்டும் இடைக்கால தடை உத்தரவை பெற்றுள்ளார். இந்த இரு வழக்குகளும், தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி. நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, இரு வழக்கு களிலும் விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து தமிழ்நாடு அரசுத் தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்துள்ளது.



ஆனால், ஐகோர்ட்டு உத்தரவுக்கு சுப்ரீம் கோர்ட்டு தடை எதுவும் விதிக்கவில்லை என்று நீதிபதிகளிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஏற்க னவே பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடைகளை நீட்டித்தும், வழக்குகளின் விசாரணையை 2 வாரத்துக்கு தள்ளிவைத்தும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



பழனி அரசு மருத்துவமனையின் முன்பு 17 தூய்மை பணியாளர்களை பணி நீக்கம் செய்யப்பட்டதை கண்டித்து, திண்டுக்கல் எம்பி சச்சிதானந்தம் தலைமையில் தூய்மை பணியாளர்கள் இரண்டாவது நாளாக காத்திருப்பு போராட்டம் நடத்தினர்.



இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியம், ஊரணங்குடி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# செம்மஞ்சேரியில் விளையாட்டு நகரம் அமைக்க வழங்கப்பட்ட பணி ஆணை ரத்து!



சென்னை, ஆக. 28–

தமிழ்நாடு அரசு விளையாட்டுத்துறைக்கு அதிக அளவில் முக்கியத்துவம் அளித்து வருகிறது. இதனால் பல்வேறு வகையான விளையாட்டுகளினுடைய சர்வதேச போட்டிகள் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடத்தப்பட்டன. அந்த வகையில், சென்னையில் உலக தரத்திலான மெகா ஸ்போர்ட் சிட்டி எனும் விளையாட்டு நகரம் அமைக்கப்படும் என்று 2023–ம் ஆண்டு முன்னாள் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் அறிவித்தார்.

இந்த நிலையில், செம்மஞ்சேரியில் சர்வதேச தரத்தில் மெகா விளையாட்டு நகரம் அமைக்க திமுக ஆட்சியில் வழங்கப்பட்ட பணி ஆணையை தமிழக அரசு ரத்து செய்துள்ளது. 112 ஏக்கரில் ரூ.206 கோடியில் விளையாட்டு நகரம் அமைக்க ஆர்பிபி என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டிருந்தது. அதனை ரத்து செய்துள்ளதாக அந்நிறுவனத்திற்கு அரசு கடிதம் அனுப்பியுள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்

## “அரசு செய்தது பெரிய வேலை என்கிறார்கள்... வேலைவாய்ப்பு கேட்டால் மட்டும் மௌனம்!”




# கிராண்ட் செஸ் டூர் சாம்பியன் பட்டம்- பிரக்ஞானந்தாவுக்கு முதலமைச்சர் விஜய் வாழ்த்து!

சென்னை, ஆக. 28–

கிராண்ட் செஸ் டூரில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனை படைத்த பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்துகள் என முதலமைச்சர் விஜய் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:–

அமெரிக்காவின் செயின்ட் லூயிஸில் நடைபெற்ற கிராண்ட் செஸ் டூர் 2026 போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ள தமிழ்நாட்டின் இளம் கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தா அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். உலகின் தலைசிறந்த வீரர்களுடன் நடைபெற்ற போட்டிகளில், அபாரமான மனஉறுதியுடனும், மதிநுட்பத்துடனும் விளையாடி சாம்பியன் பட்டத்தை வென்றிருப்பது அவரது அசாதாரண ஆற்றலுக்கும், விடாமுயற்சிக்கும் கிடைத்த அங்கீகாரமாகும். இந்த மகத்தான வெற்றி, இளம் தலைமுறையினருக்குப்புதிய நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளிப்பதோடு, தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ளது. உலக அரங்கில் மேலும் பல சாதனைகளைப் படைக்க பிரக்ஞானந்தா அவர்களை மனமார வாழ்த்துகிறேன்.





இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டாடா மோட்டார்ஸ் பெயர் மாற்றம்!

புதுடெல்லி, ஆக. 28–

இந்தியாவின் முன்னணி கார் தயாரிப்பு நிறுவனமான டாடா மோட்டார்ஸ், பயணிகள் வாகனப் பிரிவுக்கு புதிய பிராண்ட் பெயரை அறிமுகப்படுத்தியுள்ளது. இனி இந்தப் பிரிவு ‘டாடா.கார்ஸ்’ என்ற பெயரில் செயல்படும். வர்த்தக வாகனங்கள் மற்றும் பயணிகள் வாகனப் பிரிவுகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இளம் தலைமுறையினரிடம் பிராண்டை மேலும் பிரபலப்படுத்தவும், வாடிக்கையாளர்களுடன் நெருக்கமான தொடர்பை உருவாக்கவும் புதிய பெயர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனுடன், மின்சார கார்களுக்காக ‘டாடா.ஈவி’ என்ற புதிய பிராண்டும் அறிமுகமாகியுள்ளது. கடந்த 10 மாதங்களில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சியாரா உள்ளிட்ட புதிய மாடல்களுடன் சந்தை யில் தனது நிலையை டாடா வலுப்படுத்தி வருகிறது.



# இடைத்தேர்தல் நடத்த விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும்: முதல் அமைச்சர் விஜய் பதில் மனு!

சென்னை, ஆக. 28–

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், இரு தொகுதிகளில் போட்டியிட்ட முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதியை ராஜினாமா செய்தார். அதேபோல, கரூர் தொகுதி எம்எல்ஏ எம்.ஆர்.விஜயபாஸ்கர், விராலிமலை தொகுதி எம்எல்ஏ சி.விஜயபாஸ்கர், பெருந்துறை எம்எல்ஏ ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் எம்எல்ஏ இசக்கி சுப்பையா ஆகியோர் ராஜினாமா செய்துள்ளனர். இவர்களின் வெற்றியை எதிர்த்த தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ள போது, இந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கக் கோரி திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையைச் சேர்ந்த வெங்கடாஜலபதி, சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த தலைமைநீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, தேர்தல் வழக்கு முடிவுக்கு வரும் முன்பு அந்த தொகுதிக்கு இடைத் தேர்தல் நடத்துவது அரசு பணம் செலவிடப்படுவதுடன், ஒரே தொகுதிக்கு இரண்டு மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் சாசன பிரச்சினை எழும் என குறிப்பிட்டு, ஐந்து தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதித்து, இந்திய தேர்தல் ஆணையம், மத்திய அரசு, சட்டப்பேரவை செயலாளர், முதல்வர் விஜய், எம்.எல்.ஏ.–க்கள் எம்.ஆர். விஜயபாஸ்கர், சி.விஜயபாஸ்கர், ஜெயக்குமார், இசக்கி சுப்பையா உள்ளிட்டோர் மூன்று வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.



இந்த வழக்கி முதல் அமைசச்ர் விஜய் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில், 5 தொகுதி இடைத்தேர்தலுக்கு விதிக்கப்பட தடையை நீக்க வேண்டும். மக்கள் பிரதிநித்துவ சட்டப்படி 6 மாதத்திற்குள் தேர்தல் அறிவிக்க வேண்டும். எம்.எல். ஏக்கள் இல்லாமல் தொகுதி மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே, 5 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்த விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும். இடைத்தேர்தல் நடத்தக்கூடாது என்ற உள்நோக்கத்துடன் வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனவே, இடைத்தேர்தலுக்கு தடை கோரி வெங்கடாஜலபதி தாக்கல் செய்த வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

# அதிக வரி பாக்கி பட்டியலில் கரூர் தி.மு.க. அலுவலகம் இரண்டாம் இடம்!

கரூர், ஆக. 28–

கரூர் மாநகராட்சிக்கு அதிக சொத்து வரி பாக்கி வைத்துள்ளோர் பட்டியலில், மாவட்ட தி.மு.க. அலுவலகம் இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

கரூர் மாநகராட்சியின் பிரதான வரி வருவாயாக சொத்து வரி உள்ளது. இதன் மூலமே மாநகரில் குப்பை அகற்றுதல், தெரு விளக்கு, பூங்கா, சாலை பராமரித்தல், பொது சுகாதாரம், நோய் தடுப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.




இதனால் 1 முதல் 48 வரை உள்ள வார்டுகளில் வரி வசூல் பணியை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, அதிகள வில் சொத்து வரி நிலுவை செலுத்த வேண்டிய முதல் 100 பேரின் பட்டியலை https:/www.tnurbantree.tn.gov.in/karur/ என்ற கரூர் மாநகராட்சி இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த பட்டியலில் 33–வது வார்டு, கரூர் திண்டுக்கல் சாலையில் உள்ள ராமசாமி, நாராயணசாமி ஆகியோர் ரூ.36.48 லட்சம் வரி பாக்கி வைத்து முதலிடத்தில் உள்ளனர்.

தொடர்ந்து இரண்டாவது இடத்தில் 30–வது வார்டு, கவுரிபுரம் விரிவாக்கத்தில் இருக்கும் தி.மு.க. மாவட்ட அலுவலகம் உள்ளது. அந்த அலுவலகம் 2008–ல் திறக்கப்பட்டபோது ஆண்டுக்கு ரூ.1.18 லட்சம் சொத்து வரி நிர்ணயிக்கப்பட்டது. தற்போது ஆண்டு வரியாக ரூ.2.36 லட்சம் செலுத்த வேண்டும். 2008 முதல் 2026 மார்ச் வரை மொத்தம் ரூ.28.33 லட்சம் சொத்து வரி பாக்கி வைத்து, பட்டியலில் இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

# பிளஸ் 1 மாணவர்களுக்கு நவீன சைக்கிள் வழங்க ரூ.277 கோடி நிதி ஒதுக்கீடு- அமைச்சர் சம்பத் குமார்!

சென்னை, ஆக. 28–

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மீதான மானிய கோரிக்கை குறித்து அமைச்சர் சம்பத்குமார் பதிலுரை அளித்தார். அப்போது, மக்கள் நலன் என்று கூறி தன் மக்கள் நலனை மட்டும் பார்த்தனர் என எம்ஜிஆர் பாடல் பாடி அமைச்சர் சம்பத்குமார் உரையாற்றினார்.

இதற்கு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கும் அமைச்சர் பாடிய எம்ஜிஆர் பாடலுக்கும் என்ன சம்பந்தம் என தெரியவில்லை என கே.என்.நேரு விமர்சித்தார்.

தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் பதிலுரை வழங்கினார்.

அப்போது அவர் கூறியதவது:–

விஜய்தமிழ்நாடுமுதலமைச்சராவார் என 12 ஆண்டுகளுக்கு முன்பே கணித்தவர் அமைச்சர் ஆனந்த்.

திறமை இருந்தும் வாய்ப்பு இல்லாத நிலை இருக்க கூடாது, வாய்ப்பு கிடைத்தால் எந்த சமூகமும் உயரும்.

பிளஸ் 1 மாணவர்களுக்கான ஹெல்மெட், குடிநீர் பாட்டிலுடன் நவீன சைக்கிள் வழங்க ரூ.277 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு தலைமுறையை மாற்ற வேண்டுமென்றால் அந்த தலைமுறைக்கு கல்வியை கொடுக்க வேண்டும்.

5 லட்சம் மாணவர்களுக்கு நவீன மிதிவண்டி வழங்குவதற்கு 11 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.



விடுதிகளில் காலி பணியிடங்கள் ஆசிரியர் தேர்வாணையம் மூலம் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

575 விடுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மாதந்தோறும் விடுதியில் ஆய்வு நடைபெறுகிறது. மாணவர் விடுதிகளை அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கனவுகளுடன் விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களுக்கான அனைத்து வசதியும் செய்து கொடுக்க முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

விடுதியை ஆய்வு செய்தபோது மாணவர்களுடன் உரையாடிய முதலமைச்சர், எங்களை அழைத்து அறிவுறுத்தினார்.


ஆபத்து காலத்தில் காக்கும் 108 ஆம்புலன்ஸ்போல் தமிழக மக்கள் அச்சம் போக்க தவெகவுக்கு 108 எம்எல்ஏக்களை கொடுத்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அரசு அலுவலகங்களில் அதிரடி சோதனை!

சென்னை, ஆக. 28–

தமிழகம் முழுவதும் நேற்று பிற்பகலில் இருந்து, அரசு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினார்கள். மொத்தம் 38 அரசு அலுவலகங்களில் இந்த சோதனை வேட்டை நடந்தது. சென்னையை பொறுத்த மட்டில், சென்னை பல்லாவரம் மற்றும் ராயபுரம் சார்பதிவாளர் அலுவலகங்களில் சோதனை நடத்தப்பட்டது. இதேபோன்று, பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கணக்கில்



காட்டாத ரூ.1% லட்சம் பணம் கைப்பற்றப்ப ட்டது. ராயபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ரூ.9 ஆயிரத்து 500 பறிமுதல் செய்யப்பட்டது. பூந்தமல்லி ஆர்.டி.ஓ. சோதனை சாவடியில் ரூ.25 ஆயிரம் கைப்பற்றப்பட்டது. சென்னை கிண்டியில் உள்ள தலைமை எலக்ட்ரிக்கல் ஆய்வாளர் அலுவலகத்தில் நடந்த சோதனையில் ஜி–பே மூலம் பரிமாற்றம் செய்யப்பட்ட, ரூ.31.52 லட்சம் கைப்பற்றப்பட்டது. ஸ்ரீபெரும்புதூர் பி.டி.ஓ. அலுவலகத்தில் ஜி–பே மூலம் வசூலான ரூ.2.6 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. ரொக்கமாக ரூ.4 ஆயிரம் சிக்கியது. தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரூ.1 கோடியே 18 லட்சத்து 14 ஆயிரம் கைப்பற்றப்பட்டு உள்ளது என்றும், அதில் ஜி–பே மூலம் மட்டும் பரிமாறப்பட்ட ரூ.89 லட்சத்து 89 ஆயிரம் சிக்கியுள்ளதாகவும் லஞ்ச ஒழிப்பு போலீசார் தெரிவித்தனர்.

இதில், ரொக்கமாக மட்டும் ரூ.28 லட்சத்து 24 ஆயிரம் கைப்பற்றப்பட்டு உள்ளதாகவும் லஞ்ச ஒழிப்பு போலீசார் தெரிவித்துள்ளனர். இதுபோன்ற அதிரடி சோதனை வேட்டைகள், அரசு அலுவலகங்களில் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் லஞ்ச ஒழிப்பு போலீசார் கூறியுள்ளனர்.

# பக்தர்களின் வசதிக்காக வேளாங்கண்ணிக்கு சிறப்பு பஸ்கள் - போக்குவரத்துக்கழகம் அதிரடி அறிவிப்பு!!

சென்னை, ஆக. 28–

மற்ற நாட்களில் தேவைக்கேற்ப சென்னையிலிருந்து வேளாங்கண்ணிக்கும், வேளாங்கண்ணியிலிருந்து சென்னைக்கும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படும்.

தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் குணசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:– வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நேற்று முதல் செப்டம்பர் 10–ந் தேதி வரை சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது. அதன்படி, சென்னை, பெங்களூரு, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஊர்களிலிருந்து வேளாங்கண்ணிக்கு சிறப்பு பஸ்கள் நேற்று முதல் வருகிற செப்டம்பர் 10–ந் தேதி வரை இயக்கப்பட உள்ளது.

வேளாங்கண்ணி மாதா கோவிலில் 29–ந் தேதி (நாளை) கொடியேறுவதை முன்னிட்டு 28–ந் தேதி (இன்று) சென்னையிலிருந்து வேளாங்கண்ணிக்கு 150 சிறப்பு பேருந்துகளும், 29–ந் தேதி வேளாங்கண்ணியிலிந்து சென்னைக்கு 150 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளது.



அதே போல் செப்டம்பர் 8–ந் தேதி கொடி இறங்குவதை முன்னிட்டு சென்னையிலிருந்து வேளாங்கண்ணிக்கும், வேளாங்கண்ணியிலிருந்து சென்னைக்கும் 150 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது.

மற்ற நாட்களில் தேவைக்கேற்ப சென்னையிலிருந்து வேளாங்கண்ணிக்கும், வேளாங்கண்ணியிலிருந்து சென்னைக்கும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படும். இதுமட்டுமின்றி குழுவாக பயணம் செய்ய விரும்புபவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலும் பஸ்கள் இயக்கப்படுகின்றன. மேற்படி சேவையை வேளாங்கண்ணி செல்லும் பக்தர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் பருவ நெல் கொள்முதல் காலத்தை செப்டம்பர் 1-ந்தேதி முதல் தொடங்க மத்திய அரசு அனுமதி!

சென்னை, ஆக. 28–

தமிழக விவசாயிகளிடம் இருந்து மத்திய அரசின் இந்திய உணவு கழகம் சார்பில் நெல் கொள்முதல் செய்யும் பணியை தமிழக நுகர்பொருள் வாணிபக் கழகம் மேற்கொள்கிறது. இதற்காக விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு வழங்குகிறது. அதனுடன் தமிழக அரசும் ஊக்கத்தொகை வழங்குகிறது. நெல் அரிசியாக மாற்றப்பட்டு, ரேஷன் கடைகளில் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் செப்டம்பர் வரை நெல் கொள்முதல் பருவம் இருந்தது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கடந்த தி.மு.க. ஆட்சியில் ஒரு மாதம் முன்கூட்டியே, அதாவது, செப்டம்பர் 1–ந்தேதி முதல் நெல் கொள்முதல் சீசன் தொடங்கப்பட்டது.

இதை பின்பற்றி தற்போதைய த.வெ.க. அரசு சார்பில் தமிழக உணவுத்துறை செயலர் அமுதா 2026–27 பருவ நெல் கொள்முதலை



செப்டம்பர் 1–ந்தேதி தொடங்க அனுமதி கேட்டு மத்திய உணவுத்துறைக்கு கடந்த 8–ந்தேதி கடிதம் எழுதினார்.

இதை பரிசீலித்த மத்திய அரசு, பருவ நெல் கொள்முதல் காலத்தை செப்டம்பர் 1–ந்தேதி முதல் தொடங்க நேற்று அனுமதி அளித்துள்ளார். நெல் கொள்முதல் அளவு மற்றும் அரவை செய்து அரிசி ஒப்படைக்கும் காலம் ஆகியவை குறித்து வரும் 1–ந்தேதி டெல்லியில் நடக்கும் அனைத்து மாநில உணவுத்துறை செயலர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகள் கோரிக்கை நிறைவேறியது!

நாமக்கல், ஆக. 28–

13.08.2026 அன்று மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் திரு. த.லோகேஷ் தமிழ்செல்வன் அவர்களிடம் நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் ராஜா வாய்க்காலில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டி பரமத்தி வேலூர் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் வைத்த கோரிக்கை வைத்திருந்தார்கள்.

பின்னர், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. ச.ஜோசப் விஜய் அவர்கள் மற்றும் மாண்புமிகு நீர்வளம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.என். ஆனந்த் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சேர்த்தார். அதைத்தொடர்ந்து 19.08.2026 –ல் தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத் தொடரிலும் அது குறித்து தண்ணீர் திறந்து விடப்படும் என உறுதி அளித்திருந்தார். இந்நிலையில் மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் அவர்களின் ஆணைப்படி 27.08.2026–ல் ராஜவாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

# டாஸ்மாக்கில் காலி மதுபாட்டில்களை வாங்க மாட்டோம்: வியாபாரிகள் சங்கம்!

சென்னை, ஆக. 28–

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் 3 பாட்டில் வியாபாரிகள் நலச்சங்க பொதுச்செயலாளர் சிவகுமார், இணை செயலாளர் கந்தவேல் ஆகியோர் கூறியதாவது:–



டாஸ்மாக் கடைகளில் இருந்து காலி மதுபாட்டில்களை வாங்கி, சுத்தம் செய்து மது ஆலைகளுக்கு அனுப்பும் தொழிலை நம்பி சுமார் 5 லட்சம் குடும்பங்கள் வாழ்கின்றன. வண்டி, குடோன் வாடகை உயர்வு மற்றும் ஜி.எஸ்.டி. வரி குளறுபடிகளால் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே ஜி.எஸ்.டி. வரியை மது ஆலை உரிமையாளர்களே ஏற்க வேண்டும். அபராத நடவடிக்கைகளை கைவிட வே ண்டும். இதுகுறித்து அமை ச்சர்கள், மதுஆலை உரிமை யாளர்கள் ஆகியோருடன் முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி, காலி பாட்டில்களை வாங்கி சுத்தம் செய்து அனுப்பும் பணியை நிறுத்த உள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020